பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 12 உ திங்கட்கிழமை (29 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 09 கதிர்: 236

# குடாநாடு முழுவதும் நேற்று பொம்மர்கள் வெறியாட்டம்!

## 7 பேர் பலி! 30 பேர் வரை காயம்!! வீடுகள், கட்டடங்கள் தரைமட்டம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 29

குடாநாட்டில் நேற்றுப் பரவலாக ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டுவீச்சு வெறியாட்டத்தில், அப்பாவிப் பொதுமக்கள் ஏழுபேர் பலியாகினர்; முப்பதுபேர் வரை காயமுற்றனர். ஐம்பதிற்கும் அதிகமான வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமாகின.

அவ்ரோ, சீனச் சகடை, 'சீ-பிளேன்' ஆகியவை வட்டமிட்டு நோட்டமிட ஐந்து பொம்மர்கள் பரவலாக குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

சில இடங்களில் மூன்று பொம்மர்கள் கூட்டாக வந்து கோரத்தாண்டவம் புரிந்தன.

பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பல இடங்களிலும், இலக்கு எதுவுமின்றி, கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அந்தந்தப் பகுதிகளில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பல இடங்களில் பொம்மர்கள் குத்திப் பதியாமலேயே, உயரத்தில் பறந்து செல்லும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பண்டத்தரிப்பில் மூவர் மரணம்

பண்டத்தரிப்பு, அக். 29

பண்டத்தரிப்பில் மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக நேற்றுக் காலை 7 மணியளவில் பொம்மர்கள் குண்டுகளை வீசித் தாக்குதல்கள் நடத்தின.

இந்தச் சம்பவத்தில் ஒரு பெண் உட்பட மூவர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள்.

வீட்டு முற்றத்தில் குண்டு விழுந்து வெடித்ததில் அந்த வீட்டில் இருந்த பெண்மணியான துரைராசா சிவபாக்கியம் [வயது 55] மரணமானார். இவர் 6 பிள்ளைகளின் தாய் எனக் கூறப்பட்டது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த பாண் வியாபாரியான கந்தையா ஜெயானந்தன் [குஞ்சன் - வயது 35 - நான்கு பிள்ளைகளின் தந்தை] காரைநகர், பொன்னாவளையைச் சேர்ந்த மரக்கறி வியாபாரியான விமலரூபன் தர்மபாலன் [வயது16] ஆகியோரே உயிரிழந்த ஏனைய இருவரும் ஆவர்.

இவர்கள் இருவரும் பண்டத்தரிப்புச் சந்தைக்குச் சென்றுகொண்டிருந்த போது குண்டு வீச்சுக்கு இலக்காகினர் என்று கூறப்பட்டது.

[4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்நகர், குருநகரிலும் குண்டுவீச்சு!

குருநகர், அக். 29

யாழ். நகரப்பகுதியில் றக்கா வீதி (கச்சேரி - நல்லூர் வீதிக்கு அருகில்), குருநகர் கடற்கரை வீதி ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை குண்டுவீச்சு விமானங்கள் கண்மூடித்தனமாக நடத்திய குண்டு வீச்சில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் படுகாயமுற்றார்; ஐந்து பேர் சிறுகாயமடைந்தனர்; சுமார் முப்பது வீடுகள் சேதமுற்றன.

குருநகரில் வீசப்பட்ட குண்டினால் புனித செபஸ்தியார் ஆலயமும் சில வீடுகளும் சேதமுற்றன.

குருநகர் கடற்கரை வீதி-புனித செபஸ்தியார் வீதியில் படுகாயமடைந்த அந்தோனி அடைக்கலம் (கொலு- வயது 45) மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்று நண்பகல் அங்கு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவங்களில் ம. கின்ஸிலி ரோய் (வயது 15), ரூபி (வயது 18), ராஜன், எட்வின் (வயது 15) ஆகியோர் காயமுற்றனர். (உ-51)

## அரியாலையில் ஒருவர் உயிரிழப்பு

அரியாலை - கண்டி வீதியில் - வைரவர் கோவிலடிக்குச் சமீபமாக நேற்றுக் காலை 8.15 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்தியதில் ஒருவர் பலியானார். நால்வர் காயமடைந்தனர்.

அப்பகுதியில் மரக்காலை ஒன்றுக்குள் பாதுகாப்புத் தேடி ஓடியவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த இராசதுரை இராஜலிங்கம் [37 வயது] என்பவரே மரணமானவர் ஆவார்.

குண்டு வீச்சில் மரக்காலை, இரண்டு வீடுகள் என்பன பலத்த சேதமடைந்தன. இன்னும் பல வீடுகளும் சேதங்களுக்குள்ளாகின.

இப் பகுதியைச் சேர்ந்த உஷா நந்தினி [வயது 16], திருமதி ஜோசப் [வயது 69], சுகிலன் [வயது 35], தாவடியைச் சேர்ந்த நாகராசா [வயது 40] ஆகியோர் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஒ-3-143]

## கொக்குவிலில் வயோதிப மாது பலி!

கொக்குவில், அக். 29

கொக்குவில் பகுதியில் நேற்றுக் காலை 9-45 மணியளவில் இரண்டு பொம்மர்கள் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சில் வயோதிபப் பெண் ஒருவர் தலை சிதறி மூளை வெளியேறிய நிலையில் உயிரிழந்தார். ஏழு பேர் காயமுற்றனர்.

இராசையா தங்கம்மா [வயது 60] என்ற மாதுவே உயிரிழந்தவராவார்.

பொற்பதி விநாயகர் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள ஒழுங்கையில் விழுந்த குண்டினால் நால்வர் காயமுற்றனர்.

அடுத்த குண்டு. [illegible] கடலைக்கு அருகில், [illegible] கரை ஒழுங்கையில் விழுந்து வெடித்ததில் அந்தக் குண்டினாலேயே வயோதிப மாது உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதல்களினால் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமுற்றன. மேலும் பத்து வீடுகள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலில் காய [illegible] சின்னையா [illegible] பாலசிங்கம் [வயது 35], அவரது சகோ [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோவில்களை நோக்கி வட்டுக்கோட்டையில் குண்டு!

### ஒருவர் பலி; மண்டபங்கள் சேதம்

வட்டுக்கோட்டை, அக். 29

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஒருவர் மரணமானார். ஒருவர் காயமுற்றார்.

நேற்றுக்காலை 9.30 மணி அளவில் இரண்டு ஆலயங்களை நோக்கி குண்டுவீச்சுக்கள் நடத்தப்பட்டன.

மாவடி அடைக்கலந்தோட்டம்கந்தசுவாமி கோவிலடியில் வீசப்பட்ட குண்டுகளினால் ஆலயத்தில் இருந்து சுமார் 50 யார் தூரத்தில் உள்ள கல்யாண மண்டபம் சேதமுற்றது.

கோவிலடியில் நின்றுவிட்டு பொம்மரைக் கண்டு தூர ஓட முயன்ற வல்லிபுரம் செல்வநாயகம் (வயது 51) என்பவர் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்.

அடுத்து, பொம்மர், வட்டுக்கோட்டை சிவன்கோவில் மீது குண்டு வீசியது.

குண்டு ஆலயத்தில் இருந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சுன்னாகம் தபாலகம் குண்டுவீச்சில் சேதம்

சுன்னாகம், அக். 29

சுன்னாகத்தில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் பொம்மர்கள் நடத்தியகுண்டு வீச்சில் தபாலகக் கட்டடங்கள் சேதமாகின.

தபால் அதிபரின் விடுதி, தொலைத் தொடர்பு பரிவர்த்தனைப் பகுதிக் கட்டடங்கள் முற்றாக சேதமடைந்தன. தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் இருந்த கருவிகள் மற்றும் உபகரணங்கள் பலவும் நாசமாகின.

தபால் நிலையத்தின் ஒரு பகுதியும் அங்கிருந்த சில ஆவணங்களும் பாதிப்படைந்தன.

குண்டுவீச்சினால் சிதைவுற்ற சில பொருள்கள் சுமார் 200 யாருக்கு அப்பால் தூக்கி எறியப்பட்டன.

தபாலகத்தை அண்டிய வீடுகள், கடைகள் என்பனவும் சிறு சேதங்களுக்கு உள்ளாகின.

தெய்வாதீனமாக இந்தச் சம்பவத்தில் எவரும் உயிராபத்து இன்றித் தப்பிவிட்டனர். (ஒ - 3 - 143 - 68)

## வதிரியிலும் தாக்குதல்

வடமராட்சி, அக். 29

நேற்றுக்காலை வதிரியிலும் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

வதிரி, இரும்பு மதவடியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் வீடு ஒன்று சேதம் அடைந்தது. மற்றும் ஒரு குண்டு வாழைத்தோட்டத்தில் விழுந்து வெடித்தது.

எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (இ)

## மாவிட்டபுரம், கட்டுவனில் நேற்றும் மோதல்கள்

காங்கேசன்துறை, அக். 29

மாவிட்டபுரம், கட்டுவன் பகுதிகளில் நேற்றும் மோதல்கள் இடம்பெற்றன. படையினர் முகாமில் இருந்து வெளியேறுவதற்கு பல தடவைகள் முற்பட்டனர்.

அப்போது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதல்களை நடத்தினர்.

தெல்லிப்பழைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இதேவேளை, வலி. வடக்குப் பகுதியில் நேற்று ஹெலித் தாக்குதல்களும் இடம்பெற்றன. (ஒ-68-3)

## அவசர சிகிச்சை பெற 25 பேர் கப்பலில் புதன் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், அக். 29

கொழும்பில் அவசர சிகிச்சை பெறுவதற்காகக் குடாநாட்டைச் சேர்ந்த 25 நோயாளர்கள் நாளை மறுதினம் (புதன்கிழமை) பருத்தித்துறையில் இருந்து கப்பல் மூலம் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட இருக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு உதவியாக அவர்களது உறவினர்கள் 25 பேரும், ஒரு வைத்திய அதிகாரியும் இந்தக் கப்பலில் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[ஒ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உருத்ர வீணை தபேலா மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. விலாசம்: இல. 07, முதலியார் லேன், சுண்டிக்குளி (மகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில்) (14580)

9X9 ஸ்ரீல் சுருக்கு கடைக்கேற்கலும், வீட்டுக் கதவுகள், யன்னல்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 7, கைலாசபிள்ளையார் கோவில் பின்வீதி நல்லூர். (14572)

## "நிலவே நீ மயங்காதே"

மீரா வெளியீடு வன்னியூர் இந்திரா பிரியதர்ஷினி எழுதியது தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம். செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை இந் நாவலில் சந்தியுங்கள். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ். சுன்னாகம். திருக்கணிதம் சாவகச்சேரி. பிக்பென்ஸ் (B), கிளிநொச்சி. ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (14503)

## இடமாற்றம்

இல. 66 பெரிய கடை யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிய அம்பிகாவதி பென்சி கூட்ஸ். வடிக்கையாளரின் பாதுகாப்பு கருதி 54, அம்மன் வீதி. (வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை) நல்லூர் எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. (14526)

## போட்டோபிரதிகள்

தரமான போட்டோ பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'மண்டேலாரேடர்' 550/8A கே. கே. எஸ். வீதி. (ட்டாசெரு சந்திக்கு அருகாமையில்) 256/A, பருத்தித்துறை வீதி. (தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

## வைத்தியசாலை இடமாற்றம்

தெல்லிப்பளையில் இயங்கி வந்த பிரபல ஆஸ்மா வைத்தியர் டாக்டர் மா நடராஜாவின் வைத்தியசாலை கீழ்க்காணும் முகவரியில் இயங்குகிறது மே/பா, எஸ். நவரட்ணம், 84/1, கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத்துறை (சுணக்கர் சந்திக்கு அருகாமையில்) (14576)

## S. M. V. Institute

மேற்குறிப்பிட்ட கல்வி நிலையம் 221, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு [பிறவுண்வீதி நாவலர் வீதி சந்திக்கு அருகாமையில்] இடமாற்றம் செய்யப்பட்டு வகுப்புகள் 29-10-90 திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன. [14582]

## அடையாள உண்ணா விரதம்

யாழ்ப்பாணம், அக். 29

தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் இன்று 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை யாழ். கல்விப் பணிமனை முன்பாக ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் இருக்க முடிவு செய்துள்ளது (இ-30)

## போர்க்கால பிரசாரக்கூட்டம்

சாவகச்சேரி. அக். 29

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் போர்க்காலப் பிரசாரக்கூட்டங்கள் இப்பகுதியில் பரவலாக நடைபெறுகின்றன. (இ-31)

# குடாநாட்டின் மூன்று வெளிகளில் பாரிய மரம் நடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம், அக். 29

யாழ் மாவட்டத்தில் உள்ள வல்லை, கல்லுண்டாய், மண்டைதீவு வெளிகளில் பாரிய மரநடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அப்பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள் முன்வரவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் புனரமைப்பு சம்பந்தமான கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா இந்த அழைப்பை விடுத்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை முன்னிட்டு சனசமூக நிலையங்கள் தமது எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அலங்கரிப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் இயங்கக்கூடிய சூழ்நிலை இருந்தும், இயங்காதிருக்கும் சனசமூக நிலையங்கள் இன்னமும் 2 வார காலத்தில் கலைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றுவரும் பகுதிகளில் இயங்க முடியாது தடைப்பட்டுள்ள சனசமூக நிலையங்களுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. (இ-6)

# பொருள்கள் வருவது குறைந்தது

மழை காரணமாக ஆனையிறவு, கொம்படி வெளிப் பாதை ஊடாகப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

சாவகச்சேரிக்கு அத்தியாவசிய பொருள்களான அரிசி, மா, சீனி ஆகியவை வருவது குறைந்துவிட்டது. (இ - 31)

# ஒரு வரியில் அமைந்த நம்பிக்கைப் பிரேரணை!

புதுடில்லி, அக். 29

ஒரு வரியிலான நம்பிக்கை கோரும் பிரேரணையை பிரதமர் வி. பி சிங் சனியன்று நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தார்.

''அமைச்சரவை மீது இச்சபை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது'' - இப்படி அப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை -

வி. பி. சிங் அரசுமீது நம்பிக்கையில்லை என்று கூறும் இரண்டு பிரேரணைகள் பாரதீய ஜனதாக்கட்சி, இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றினால் தனித் தனியாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மூன்று பிரேரணைகளும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறும் நடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. (உ-எ)

# மன்னார் ஆஸ்பத்திரியில் இரவில் இருளில் சிகிச்சை

மன்னார், அக் 29

மன்னார் ஆஸ்பத்திரியில் இரவு நேரங்களில், நோயாளர்களுக்கு இருளிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது. பிரசவங்கள் கூட மெழுகுதிரி வெளிச்சத்தில் நடந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாருக்கு நீர்மின்சாரம் வந்த சில நாட்களில் யுத்தம் தொடங்கியது. மின்சார விநியோகம் தடைப்பட்டது.

எனினும் ஆஸ்பத்திரிக்கு ஜெனரேட்டர் மூலம் சில மணி நேரம் மின்சாரம் பெறப்பட்டது இப்போது எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. அதனால் ஆஸ்பத்திரியும் ஒளி இழந்து தவிக்கிறது

இதே வேளை மன்னார்ப் பகுதியில் உள்ள ஏனைய மருத்துவ மனைகளிலும் இதே நிலை தான். (அ)

# அகண்ட சாயி பஜனை

யாழ்ப்பாணம், அக். 29

அரியாலை பகாவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா பஜனை மண்டபத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 00 மணி தொடக்கம் 24 மணி நேர சாயி பஜனையும் பிரார்த்தனையும் நடைபெறும். (இ)

# நான்கு மாகாணங்களிலும் பெனாஸிர் கட்சி தோல்வி

இஸ்லாமபாத். அக் 29

பாகிஸ்தானில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நான்கு மாகாணசபைகளின் தேர்தல்களிலும் பெனாஸிர் பூட்டோவின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி மீண்டும் தோல்வி அடைந்தது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலிலும் பாகிஸ்தான் மக்கள் கட்சி தோல்வி அடைந்தது தெரிந்ததே.

மிகப்பெரிய மாகாணமான பஞ்சாப்பில் இஸ்லாமிய ஜனநாயக அணி அமோக வெற்றியீட்டியது: பலுசிஸ்தான் மற்றும் எல்லைப்புற மாகாணத்திலும் இஸ்லாமிய ஜனநாயக அணியே அரசுகளை அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது;

பெனாஸிரின் சொந்த மாகாணமான சிந்துவில் மட்டும் பாகிஸ்தான் மக்கள் கட்சி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது.

பஞ்சாப் மாகாணத்தில் லாகூர் சட்டசபைத்தொகுதியில். காலஞ்சென்ற ஜனாதிபதி ஸியா - உல் - ஹக்கின் இன்னொரு புதல்வரான அன்வர் உல் - ஹக் வெற்றியீட்டினார். இன்னொரு புதல்வர் புதன் நடந்த பொதுத்தேர்தலில் தான் போட்டியிட்ட 2 தொகுதிகளிலும் வெற்றியீட்டி எம்.பியானார் என்பது தெரிந்ததே. [இ-எ]

# அந்தியேட்டி அழைப்பும் 41ம் நாள் நினைவஞ்சலியும்



## 2ஆம் லெப்ரினன் நிமலன் (பாலசிங்கம் ஜெயவதனன்)

| தாயின் மடியில்: | தமிழீழ மண்ணில்: |
|---|---|
| 12 - 03 - 1974 | 16 - 09 - 1990 |

நாட்டுக்கொரு வீரன் வீட்டில் பிறந்தான்
நாட்டைக் காக்க வீட்டைத் துறந்தான்
கோட்டையிலே தமிழீழக் கொடியேற்றப்
புறப்பட்டான்
கொடிய யுத்தமதில் களத்தில் வீரமரணமடைந்தான்

எம் கண்ணின் கருமணியே களங்கமிலா ஒளிவிளக்கே
எம் மகனே நீ ஓடி வருவாய் என வழி பார்த்தோம்
யுத்தங்கள் பல புரிந்து உடல் நீத்தான் தமிழீழத்தில்
யுகம் யுகமாய் தனது பெயர் நிலைத்திருக்கச்
சென்றுவிட்டான்!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 29-10-90ல் எமது வீட்டில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா,
தாமரைவதனன், பாலவதனன்,
கல்யாணி, சுபாஜினி, பாலவதனி,
மற்றும் குடும்பத்தினர்.

தும்பளை,
பருத்தித்துறை. [14583]


# நீம் தூபம்




நித்தம் நித்தம் நீம் புகைத்து
நுளம்பினை நாம் விரட்டியே
நிம்மதியாய்த் தூங்கிடுவோம்
நித்தம் சுகம் கண்டிடுவோம்

இயற்கை தரும்
நீம் சுகாதார தூபம் பைக்கற்
விலை ரூ. 1 00 மட்டுமே.
மொத்தமாக வாங்கினால் சலுகை விலை
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.
(சி-5347)


# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சிவானந்தன்

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் சிவானந்தன் அரியாலையில் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், சற்குணானந்தன் (சித்திராஸ் - அரியாலை), சர்வானந்தன் (ஆசிரியர் - சன்மார்க்க இந்துமகாவித்தியாலயம், கொழும்புத்துறை). சபானந்தன் (இத்தாலி). நித்தியானந்தன், சாந்தினி (இத்தாலி), கேசவராணி (இத்தாலி), மாலினி, கமலராணி, செல்வராணி ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 29 - 10 - 90 திங்கட்கிழமை இன்று மாலை 4 00 மணிக்கு முள்ளி வீதி, அரியாலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சற்குணானந்தன்.

முள்ளி வீதி,
அரியாலை. (14587)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசின் பாதை

தென்பகுதியில் ஜே. வி. பி யை அடக்கியது போல, வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளை அடக்கிவிட முடியாது. இப்படிக் கூறியவர் விடுதலைப் புலிகள் பிரமுகர் வெரும் அல்லர். ஸ்ரீலங்காவின் முன்னாள் பிரதமரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

திருமதி பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த திரு. கே. பி இரத்தினாயக்கா. ''வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின் பொறுப்பான அமைப்புகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும்'' என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். பொறுப்பான அமைப்பு என்று அவர் குறிப்பிட்டிருப்பது விடுதலைப் புலிகளைத்தான் என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஊகிக்கலாம்.

முன்னாள் பிரதமரும், முன்னாள் அமைச்சரும் தங்கள் அனுபவத்தினால் பேசுகிறார்கள். ஆனால் ஜனாதிபதி பிரேமதாசாவும், அவரது அமைச்சர்களும் இன்னும் போதிய அனுபவம் பெறாததால், ஜே. வி. பியை அழித்தது போல, புலிகளையும் அழித்தே தீருவோம் என்று சொல்கிறார்கள். கொழும்பில்இருக்கும் அமைப்புகளுடன் பேசி, தங்களுக்குப் பிடித்தமான தீர்வைத் திணிக்கலாம் என்று எண்ணுகிறார்கள்.

அவர்கள் அழித்ததாக நினைத்த ஜே. வி. பி மீண்டும் தலையெடுத்திருப்பதையும், தங்கள் சொந்த முடிவை அந்த இயக்கத்தின் மீது திணிக்க முயன்று தோல்வி கண்டதையும் மறந்து விட்டார்கள். அவற்றில் இருந்து பாடம் படிக்கத் தவறிவிட்டார்கள்.

மக்களின் ஆதரவு பெற்ற ஓர் இயக்கத்தை அல்லது அமைப்பை ஒதுக்கி வைத்துவிட்டு, அல்லது ஒழித்துக்கட்டலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டு எந்தப் பிரச்சினையையும் எவராலும் தீர்த்து வைக்க முடியாது. தற்காலிக அல்லது அரைகுறைத் தீர்வு எதனையும் திணிக்க முயன்று அதில் வெற்றி கண்டாலும் கூட, அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மக்கள் எழுச்சி எப்போதாவது மீண்டும் வெடிக்கும் என்பதை மறந்துவிடலாகாது

இது தமிழர் பிரச்சினைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமென்றி எந்த அரசியல்பிரச்சினைக்கும் பொதுவானது.

எனவே, போர் ஒருபுறம், குழப்பம் நிறைந்த சர்வ கட்சி மாநாடு மறுபுறம் என்று காலம் கடத்தாமல். ஆக்கபூர்வமான சிந்தனையுடன் அரசு செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. தமிழர் பிரச்சினையைத்தீர்த்து இந்த நாட்டில் அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்ற உண்மையான விருப்பம் அரசாங்கத்துக்கு இருக்குமானால், தான் இப்போது நடக்கும் தவறான பாதையில் இருந்து விலகி, நடைமுறைச் சாத்தியமான சரியான பாதைக்குத் திரும்ப வேண்டும் அதற்கு இன்னும் காலம் பிந்திப் போகவில்லை.

# வடமராட்சி கிழக்கு அகதிகளுக்கு அரச காணிகளில் இருப்பிட வசதி

பருத்தித்துறை, அக். 29

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகளுக்கு அரச காணிகளில் இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்கிலுள்ள திருமலை, ஆனையிறவு ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தோர் நாகர் கோவில் தாளையடி ஆகிய பகுதிகளிலுள்ள அரச காணிகளில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கான குடிசைகளை அமைக்கும் பணிகளை சிற்றூரவைகளும் வட்டவைகளும் மேற் கொண்டு வருகின்றன.

அகதிகள் தங்கி இருப்பதால் இயங்க முடியாதுள்ள பாடசாலைகளை இனி இயங்க வைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-118)

## சாவகச்சேரி பகுதிக்கு அகதிகள்வருகை

வானத் தாக்குதல்கள் காரணமாக வலிவடக்கு: வலி கிழக்குப் பகுதிகளில் இருந்து மக்கள் கால்நடையாகவும் சைக்கிள்களிலும சாவகச்சேரிக்கு வந்தவண்ணம் இருக்கின்றனர்.

ஏழாலை, சுன்னாகம், கட்டுவன், மல்லாகம், அச்சுவேலிப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் நுணாவில், மட்டுவில், சரசாலை, கல்வயல் கிராமங்களை வந்தடைந்துள்ளனர்.

சிலர் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் ஏனையோர் பாடசாலைகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர், (இ - 31)

## வவுனியா வர்த்தகர்களுக்கு "பாஸ்" வழங்குவதற்கு முடிவு

வவுனியா, அக். 29

வவுனியா நகரினுள் இயங்கும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் விசேட அனுமதிப்பத்திரம் [பாஸ்] வழங்கப்படும்.

வன்னிப் பிராந்திய பாதுகாப்பு தலைமையக இணைப் பதிகாரி இதனைத் தெரிவித்தார்.

பாஸ் வைத்திருப்போர் தடைமுகாம்களில் சோதனைக்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படாது

[இ]

## சென். ஜேம்ஸ் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக் 29

சமீபத்திய இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம் பழைய மாணவர்கள், பெற்றோர். ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் திருத்தப்பட்டு கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

(இ)

## பயிலுநர் ஆசிரியருக்கு கருத்தரங்கு

பருத்தித்துறை, அக் 29

வடமராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கம், தொண்டமானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தின் அனுசரணையுடன் கற்றல் கற்பித்தல் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது,

இது தொடர்பாக எதிர் வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் சமூகம் அளிக்குமாறு வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரிவிலுள்ள சகல பயிலுநர் ஆசிரியர்களும் கோரப்பட்டுள்ளனர். (இ-118)

## மலையக ஆசிரியர் பதவி அப்பகுதி இளைஞருக்கே

நுவரெலியா, அக். 29

மலையகப் பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்களை அப்பகுதியில் உள்ளவர்களைக் கொண்டே நிரப்பும் புதிய திட்டம் ஒன்று குறித்து கல்வி துணை அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் சிபார்சு செய்துள்ளார்.

மலையக ஆசிரியர் நியமனத்தில் கல்வித் தகைமை குறைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ)

## மக்களை அழைத்துச் சென்று படையினர் கருத்தரங்கு

ஊர்காவற்றுறையின் சில பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள சில பொது மக்களை அழைத்துச் சென்று கருத்தரங்கு நடத்தினராம்.

கடந்த வாரம் இடம் பெற்ற இந்த சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;- கரம்பன், செபஸ்தியார் கோவிலடி, அம்பலப் புலம், அயித்தாம் புலம் ஆகிய பகுதிகளில் தமது வீடுகளைப் பார்க்க வந்திருந்த பொது மக்கள் சிலரே படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுற்றி வளைப்பில் அகப்பட்டு தப்பி வந்த ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

(இ - 6 - ரி)

### இராணுவம் முன்னேறிய பகுதியில் சிக்கிய

## மேலும் பலரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், அக். 29

காங்கேசன்துறை. மயிலிட்டி தையிட்டி ஆகிய பகுதிகளில் இராணுவம் முன்னேறிய இடங்களில் சிக்கிக் கொண்டுள்ளவர்களில் மேலும் பலரின் விவரங்கள் கிடைத்துள்ளன.

சனிக்கிழமை மாலை வரை தெல்லிப்பழை ப. நோ: கூ. சங்க தகவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

தையிட்டி சாந்தா வீதியைச் சேர்ந்த செல்லப்பா தம்பிராஜா, தம்பிராஜா அன்னமுத்து தையிட்டி குருந்து வீதியைச் சேர்ந்த கந்தையா சேதுப்பிள்ளை, கந்தையா ஆசைப்பிள்ளை, பொன்னுத்துரை சின்னத்தங்கம், சிவனடியார் மல்லிகா தேவி, சிவனடியான் சிவ வெங்கடேஸ்.

தையிட்டி கலைவாணி வீதியைச் சேர்ந்த வேலாயுதம் சரநேசன் (வயது 3), வல்லிபுரம் மாணிக்கம், கணபதிப்பிள்ளை இளையதம்பி, இளையதம்பி பொன்னம்மா, வேலயுதம் நரேந்திரன் (1½ வயது).

தையிட்டி கேசரி வீதியைச் சேர்ந்த காசிமர் முதலித்தம்பி, முதலித்தம்பி செல்லம்மா, ஆறுமுகம் கந்தையா, கதிர்காமர் அருளம்பலம், அருளம்பலம் நாகம்மா, ஆறுமுகம் சின்னம்மா இராசையா பொன்னம்மா.

காங்கேசன்துறை சோதி வீதியைச் சேர்ந்த கதிரேசப்பிள்ளை நாகமுத்து, லட்சுமி நாகமுத்து, கதிர்காமநாதன் புஸ்பம்.

தையிட்டி விக்கினேஸ்வரா வீதியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை அருணாசலம், வல்லிபுரம், செல்லம்மா வல்லிபுரம், பரமநாதன்.

காங்கேசன்துறை மங்கோலை வீதியைச் சேர்ந்த முத்தையா இராசையா.

(இ - 5 - 3)

## ரூ. 2 லட்சம் நஷ்டம்

யாழ்ப்பாணம், அக் 29

சமீபத்திய விமானத்தாக்குதலால் அரியாலையில் தற்காலிகமாக இயங்கி வந்த யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகத்துக்கு 2 லட்சம் ரூபாவுக்குமேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைமையகம் தற்போது மீண்டும் ஸ்ரான்லி வீதிக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே.

(இ-6)

## இராணுவ நடவடிக்கையின்போது 973 வீடுகள், கடைகள் கிளிநொச்சியில் அழிப்பு

யாழ்ப்பாணம், அக், 29

இராணுவ நடவடிக்கையின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான 973 வீடுகள், கடைகள் அழிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற சேதங்கள் குறித்து கிளிநொச்சி அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் விவரமான அறிக்கை ஒன்றை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்ட விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சொந்தமான 973 வீடுகள், கடைகள், கட்டடங்கள் ஆகியனவும்— அரச செயலகம் உட்பட 14 அரசுக்குச் சொந்தமான கட்டடங்களும்,— அரச அலுவலகங்கள் இயங்கிய 8 தனியாருக்கு சொந்தமான கட்டடங்களும்— அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3

## கொழும்பு அகதி முகாம்களில் தொற்றுநோய் பரவுகிறது

கொழும்பில் உள்ள மூன்று முகாம்களில் தங்கியுள்ள வடக்கு- கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அகதிகள் மத்தியில் தொற்று நோய் பரவி வருகிறது

பெரும்பாலான அகதிகள் சின்னம்மை, கண்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொற்று நோய் பரவுவதைக் கட்டுப் படுத்த டாக்டர்கள் முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## இளாலியில் திருடர்கள் கைவரிசை

தென்மராட்சி, அக். 29

இளாலிப் பகுதியில் பல வீடுகள் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகி உள்ளன.

இப்பகுதியில் அடிக்கடி வானத் தாக்குதல்கள் இடம் பெற்று வருவதால் பீதியின் காரணமாக நான்கு, ஐந்து குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து ஒரே வீட்டில் இரவு வேளைகளில் தங்குவது வழக்கமாகி உள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் திருடர்கள் வீடுகளில் புகுந்து பெறுமதியான பொருள்கள் மற்றும் கால்நடைகளை அபகரிப்பு செய்து வருகின்றனர்.

[இ-117]

## விசர்நாய்க்கடி மருந்து வகைகள் போதுமான அளவு உற்பத்தியில்லை

யாழ்ப்பாணம். அக். 29

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் விசர் நாய்க்கடி மருந்து (ஏ. ஆர். வி ) நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை அடங்கிய சுகாதாரப் பகுதிக்குப் போதுமான [illegible] துக்கு இதுவே காரணம்.

இலங்கை முழுவதும் சராசரி நாள் ஒன்றுக்கு 250 பேருக்கு விசர் நாய்க்கடி மருந்து தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் தினமும் 90 பேருக்குத் தேவையான விசர்நாய்க்கடி மருந்தே உற்பத்தி செய்யப்படுகிறதாம்

யாழ்: செஞ்சிலுவைச் சங்கத்தின் மதிப்பீட்டின்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை அடங்கிய சுகாதாரப் பகுதிக்கு தினமும் சராசரி 40 பேருக்கு விசர் நாய்க்கடி மருந்து தேவைப்படுகிறது.

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் போதுமான மருந்து உற்பத்தியாகாததால் போதுமான மருந்து இங்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை.

இதனை அடுத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நேரடியாக விசர்நாய்க்கடி மருந்தை தொன்வளவு செய்து வடபகுதி மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது. (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரியை திறக்க
# சாத்தியமான இணக்க நிலை

யாழ்ப்பாணம், அக். 29

யாழ். போதனா ஆஸ்பத்திரி எதிர்வரும் முதலாம் திகதி, வியாழக்கிழமை தொடக்கம் மீண்டும் யாழ். நகரில் இயங்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக மிக நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

இது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் இடையில் இணக்க ஒழுங்கு ஏற்பட்டுள்ளதாகவும் —

அந்த இணக்கம் குறித்து நேற்று கொழும்பில் உள்ள செ. ச. சர்வதேசக் குழு மூலம் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தப் பட்டதாகவும் —

அதற்கான அரசின் அங்கீகாரம் கிடைத்ததும் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்கத் தொடங்கும் எனவும்-

விஷயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

ஆஸ்பத்திரியைச் சூழ வகுக்கப்பட இருக்கும் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான வரைபடம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இணக்க ஒழுங்கு குறித்த அரசின் அங்கீகாரம் அனேகமாக இன்று கிடைக்கக்கூடும் என்றும் அதன் பின்னர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொறுப்பேற்கும் எனவும் அறியவந்தது. (அ-3)

## அத்வானி ஆதரவாளர் தற்கொலை!

புதுடில்லி, அக். 29

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிஷன் அத்வானி கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக பாரதீய ஜனதா ஆதரவாளரான கேவல் சிங் என்பவர் அயோத்தியில் தற்கொலை செய்துகொண்டார். (ஒ-எ)

## கடற்படை படகு சேதம்

யாழ்ப்பாணம், அக். 29

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) காலை 7.30 மணியளவில் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினரின் விசைப்படகு ஒன்று விடுதலைப் புலிகள் வைத்த கடற்கண்ணியில் சிக்கி பலத்த சேதம் அடைந்தது.

அதில் இருந்த பல கடற்படையினர் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த தகவற் குறிப்பு ஒன்றில் இவ்விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## 25 மலையக இளைஞர் கண்டியில் கைதாகினர்

கண்டி, அக். 29

கண்டி நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொலீஸார் நடத்திய திடீர் சோதனையில் 25 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இத் தேடுதல் இடம்பெற்றது.

கைதான இளைஞர்கள் அத்தனை பேரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதானவர்கள் சிலரிடம் அடையாள அட்டைகள் இருக்கவில்லை என்றும் இவர்களில் சிலர் வியாபார நோக்கத்திற்காக கொழும்பில் இருந்து கண்டி வந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## ஹெலியும் தாக்கு

யாழ்ப்பாணம், அக். 29

உரும்பராய், கோண்டாவில் பகுதிகளில் நேற்றுக் காலை 10. 30 மணியளவில் ஹெலி ஒன்று கலிபர் தாக்குதலை நடத்தியது. (ஒ-6)

## உரமானியம் இல்லை; ஆயுதங்களுக்கே பணம்!
### சபையில் ரஞ்சன் தகவல்

தோட்டத்தொழில் துறைக்கு இனிமேல் ஒருபோதும் உரமானியம் வழங்கப்பட மாட்டாது. அதற்குச் செலவிடப்படும் பணத்தைப் பயன்படுத்தி ஆயுதங்களும் வெடிமருந்துகளும் வாங்குவோம்.

பெருந்தோட்ட தொழில் துறை அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன இந்தத் தகவலை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை தேயிலைச்சபை திருத்தச் சட்டமூலம் சம்பந்தமான விவாதம் கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஒ-6)

## ரஞ்சனின் பலாலி விஜயத்தை அடுத்தே விமான தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், அக். 29

பாதுகாப்புத்துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்று முன்தினம் சனிக்கிழமை பலாலிக்கு வந்ததைத் தொடர்ந்தே, குடாநாட்டில் நேற்றுப் பரவலான விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது.

திரு. விஜேரத்தினா சனிக்கிழமை பலாலிக்கு விஜயம் செய்தார். இப்போதைய இராணுவ நிலைமை குறித்து வடபகுதித் தளபதி டென்சில் கொப்பேகடுவே அவருக்கு விளக்கிக் கூறினார்.

பலாலியில் படையினர் மத்தியில் அமைச்சர் உரையாற்றுகையில், இனி மேற்கொள்ளப்பட வேண்டிய தாக்குதல் திட்டங்கள் குறித்து விளக்கினார்.

இராணுவத்தினர் விரைவில் நவீன போர் ஆயுதங்களை கையாளக் கூடியதாக இருக்கும். நவீன ரக ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் மிக விரைவில் இறக்குமதியாக உள்ளன-

இப்போது நடக்கும் போர் முடிந்தாலும், எதிர்காலத்தில் ஒரு லட்சம் படையினர் எப்போதும் உஷாராக வைக்கப்படுவர். அதற்கேற்ற விதத்தில் முப்படைகள் ஆட்பலம் அதிகரிக்கப்படும் — என்றும் திரு. ரஞ்சன் படையினர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மன்னாரிலுள்ள தள்ளாடி, சிலாவத்துறை முகாம்களுக்கும் சனிக்கிழமை விஜயம் செய்தார். [அ]

## தீவுப்பகுதி மக்களுக்கு விசேட நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், அக். 29

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட தீவுப் பகுதி மக்களுக்கு விசேட நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு நயினாதீவுத் துறையில் வைத்து இறக்கப்பட்ட 215 மெற்றிக் தொன் நிறையுடைய மா, பருப்பு, பால் மா வகைகளே நிவாரணமாக வழங்கப்பட இருக்கின்றன.

யாழ்- அரச அதிபரால் வழங்கப்படும் நிவாரணத்துக்கு புறம்பாகவே இந்த நிவாரணம் தீவுப்பகுதிகளுக்கு வழங்கப்பட இருக்கிறது.

கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருள்கள் ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. [ஒ-3]

## சகடையின் அதிர்ச்சியால் மரணம்

சகடை விமானத்தின் சத்தத்தினால் அதிர்ச்சி அடைந்த ஒருவர் மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டைப் பகுதியில் சினச் சகடை (வை-12) விமானம் பேரிரைச்சலுடன் தாழப்பறந்து சென்றது.

அந்த சத்தத்தினால் வயதானவர்கள், நோயாளர்கள் பலர் அதிர்ச்சிக்குள்ளாகினர். அவர்களில் ஒருவரான வட்டு மேற்கைச் சேர்ந்த நாகேசு முருகேசம்பிள்ளை (68 வயது) மரணமானார். [அ-161]

## சிங்கின் கட்சிக்குள் லடாய்!

புதுடில்லி, அக். 29

பிரதமர் வி. பி சிங் பதவி விலகவேண்டும் என்று ஆளும் ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த 12 எம். பிக்கள் நேற்று கோரிக்கை விடுத்தனர்.

இந்த எம். பிக்கள் நேற்று புதுடில்லியில் கூட்டாக செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

நூறு ஜனதாதள் எம்.பிக்கள் பிரதமரைச் சந்தித்து அவருக்கு ஆதரவு தெரிவித்ததாக பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட செய்தி தவறானது என்றும் பொதுசன தொடர்பு சாதனங்கள் அரசினால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை —

ஜனதாதள் தலைவர்களில் ஒருவரான திரு. சந்திரசேகர் "ஜனதாதள் கட்சியில் பிளவை ஏற்படுத்த நான் விரும்பவில்லை" - என்று சொன்னார். (ஒ-எ)

## போக்குவரத்து தடைப்பட்டது

புளியங்கூடல், அக். 29

சுருவில்துறையில் இருந்து அனலைதிவுக்குப் படகில் பயணத்தைமேற்கொண்டபயணிகள் மீது கடந்த 26 ஆம் திகதி கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அனலைதீவு, எழுவைதீவுக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. [உ-ரி]

## தீவுப்பகுதியில் பொம்மர் சாகசம்

புளியங்கூடல், அக். 29

நேற்றுக்காலை 10 மணியளவில் சுமார் ஒருமணி நேரம் மண்டைதீவு, வேலணை, அல்லைப்பிட்டி உட்பட தீவுப் பகுதியின் பல இடங்களின் மேலும் பொம்மர்கள் தாழப் பறந்து சாகசம் புரிந்தன. (ஒ ரி)

## அரச அதிபர் கொழும்பு பயணமானார்

யாழ்ப்பாணம், அக். 29

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்றுக் காலை கொழும்பு பயணமானார்.

அவர் அத்தியாவசியசேவைகள் நாயகம் திரு சரித்த ரத்வத்தை உட்படப் பல அதிகாரிகளையும் சந்தித்து அத்தியாவசிய சேவைகள் உட்படப் பல விடயங்கள் குறித்து விளக்க இருக்கிறார். (ஒ-3)

## தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாவர்

கொழும்பு, அக். 29

தொண்டர்ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நிரந்தர ஆசிரிய நியமனங்களை வழங்க கல்வி அமைச்சுநடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## வெளியே வந்தனர்

காங்கேசன்துறை, அக். 29

வலி- வடக்கு இராணுவ நடவடிக்கையின்போது மயிலிட்டி கொலனிப் பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்கிய மூன்று வயோதிபப் பெண்கள் கடந்த சனிக்கிழமை தெல்லிப்பளை வந்து சேர்ந்தனர்.

ஐந்து நாட்களாக உண்பதற்கு எதுவும் இல்லாமல் தாம் பட்டினியாக இருந்ததாக அந்தப் பெண்கள் தெரிவித்தனர். (அ-68)

## மரண அறிவித்தல்
### வல்லிபுரம் செல்வநாயகம்
[யாழ்ப்பாணம் பிரதான இங்கர் கொம்பனி முகாமையாளர்]

வட்டு-தெற்கு, வட்டுக்கோட்டையில் வசித்தவரான திரு. வல்லிபுரம் செல்வநாயகம் [யாழ்ப்பாணம் பிரதான சிங்கர் கொம்பனி முகாமையாளர்] அவர்கள் 28-10-1990 அன்று காலை அகால மரணமானார்.

அன்னார் திருமதி வேலருட்செல்வியின் அருமைக் கணவரும், செல்வன் சுரேந்திரா, செல்வன் பாலேந்திரா, செல்வி நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தம்பிப்பிள்ளை செல்லம்மாவின் அருமை மருமகனும், திரு. த.வெள்ளியங்கிரிநாதன் [நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி] அவர்களின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-10-1990 இன்று காலை 8-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் காலை 10-00 மணிக்கு தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்!
மனைவி, மக்கள்,
மைத்துனர்.

வட்டுக்கோட்டை.
[14538]

## கொக்குவிலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரிகளான சிவசுப்பிரமணியம் பூமார் [வயது 36], ஸ்ரீபாஸ்கரன் சியாமளா [வயது 22], மற்றும் சிவசுப்பிரமணியம் வசிதரன் [வயது 4], சிவசுப்பிரமணியம் ஜினிதா [வயது5] [இவர்கள் ஐவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்], சிவபாதசுந்தரம் இரத்தினம்மா [வயது 70], தனபாலசிங்கம் சபேஸ்வரன் [வயது 12].

(உ-69-6)

## பண்டத்தரிப்பில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வீச்சினால் 3 வீடுகள் சேதமடைந்தன.

நேற்றைய இந்தச் சம்பவத்தில் காயமடைந்த துரைராஜா கணேசன் [வயது 30] மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

குண்டுவீச்சில் பாதிக்கப்பட்ட கே. குமாரகுலசிங்கம் [வயது 32]. சண்முகம் கனகரத்தினம் [கொல்லங்கலட்டி] ஆகியோர் மயக்கமுற்ற நிலை [illegible] [ஒ-120]

## கோவில்களை..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 20 யார் தொலைவில் இருந்த கல்யாண மண்டபம் மீது வீழ்ந்தது. அது முற்றாக தரைமட்டமானது. இது புதிதாகக் கட்டப்பட்ட மண்டபமாகும். சில மாதங்களுக்கு முன்னர்தான் கட்டடவேலைகள் பூர்த்தியாகி இருந்தன.

இந்தக் குண்டு வீச்சினால் சிவன்கோவில் கூரையும் சேதமுற்றது. கோயில்வீதி அருகே செல்லும் ஒழுங்கையால் சென்றுகொண்டிருந்த எஸ். நாகேஸ்வரன் (வயது 36) குண்டுவீச்சினால் பலத்த காயமடைந்தார். அவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். [அ-161]

## குடாநாடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது - இலக்கு ஏதுமின்றி - குண்டுகளை வீசிச் சென்றன.

மக்கள் வாழும் பகுதிகளில் விழுந்த இந்தக் குண்டுகளினால் வீடுகள், அரச நிறுவனங்கள், ஆலயங்கள் என்பன சேதமுற்றன. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org